## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பனியின் ("கம்பனி") 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால்

தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

- பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------

| இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் இடமளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் போது தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கு ஒன்று ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும், 2020 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 186,556 தொகையான கிடைக்க வேண்டிய மீதி செலுத்த வேண்டிய மீதிகளில் ஈடுசெய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு பெறுமதியிடும் போது கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி இரண்டில் குறைந்த பெறுமதியில் இறுதி இருப்பு பெறுமதியிடப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்படாமையின் காரணமாக இறுதி பூர்த்தி தேயிலை இருப்பு ரூபா 7,028,473 தொகை அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டின் இலாபம் அந்த பெறுமதியினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இறுதி இருப்பு கணக்கீடு செய்யும் போது இறுதி பெறுமதி அடிப்படை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், நியமத்தின் பிரகாரம் கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி இரண்டில் குறைந்த பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்குமாயின் நடப்பாண்டின் தேறிய இலாபம் ரூபா 7,028,473 இனால் குறைவடைகின்ற போதும், 2020/2021 இன் நிதி ஆண்டில் தேறிய இலாபம் ரூபா 7,028,473 இனால் உயர்வடைந்திருந்தது. அதன் பிரகாரம் உள்ளபடியாக இறுதி பெறுமதி இறுதி இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் 9 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு பெறுமதியிடப்பட வேண்டும். |
| (இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட வருமான வரி தொகை காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,422,829 தொகையான பொருளாதார | 2018/2019 ஆம் ஆண்டின் போது கம்பனியில் நட்டமொன்று அறிக்கையிடப்பட்டமையால் 2019/2020 இல் வருமான வரி செலுத்தப்படாதிருந்ததுடன், செலுத்தப்பட்ட பொருளாதார சேவைக் கட்டண தொகை | நியமத்தின் நிதி ஏற்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவைக் கட்டணத்தின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் இது சரியானதாகும். | |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 2,550,000 கூட்டுத் தொகையான களுபோவிட்டியான மற்றும் தேரங்கல கைத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணி 1994 ஆம் ஆண்டின் போது கைப்பற்றப்பட்டதன் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | களுபோவிட்டியான மற்றும் தேரங்கல தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணி தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கையொன்று இது வரை பெறப்படாதிருந்ததுடன், கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கையை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு முடிவுறுத்தப்பட்ட ரூபா 238,933,334 தொகையான பொறிகள் மற்றும் உபகரணங்கள், தளபாடம் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட போதிலும், அதில் மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தப்பட்டு சரிசெய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமான அசையும் மற்றும் அசையாத சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நான்கு தொழிற்சாலைகளுக்கான சொத்துக்கள் தொடர்பாக 02 மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. பிரதான அலுவலகத்தின் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்குரிய மதிப்பீட்டு அறிக்கையை பெற்று மிகுதி நடவடிக்கைகளுக்காக திட்டமிடப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தி மற்றும் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 74(ஓ) பந்தியின் பிரகாரம் பிணை பத்திரங்களாக வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் | எதிர்வரும் வருடத்தின் போது சரிசெய்யப்பட்டு பிணைப் பத்திரங்களாக வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் | இலங்கை கணக்கீட்டு 16 இன் 74 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், கம்பனி 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 78,000,000 தொகையான தொழிற்படு மூலதன கடனை பெற்றுக் கொள்ளும் போது பிணைப் பத்திரங்களாக வைக்கப்பட்ட களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை அமைந்துள்ள காணி தொடர்பாகவும் வங்கி மேலதிகபற்றை பெற்றுக் கொள்ளும் போது பிணைப் பத்திரங்களாக வைக்கப்பட்ட ரூபா 94,360,821 தொகையான நிலையான வைப்புக்கள் தொடர்பாகவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கிடைத்த வட்டி வருமானம் ரூபா 11,988,443 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 14,724,355 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், உயிரியல் விஞ்ஞான சொத்துக்களை கைப்பற்றும் செலவினம் ரூபா 96,917 தொகை குறைவாக பதியப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் போது உயிரியல் விஞ்ஞான பொருட்களை கைப்பற்றும் செலவினம் ரூபா 1,918,407 ஆகும். அதில் தேறிய பெறுமதியான ரூபா 1,821,490 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் கிடைத்த வட்டி வருமானம் ரூபா 11,988,443 தொகையாகும். பீ.சீ.சீ லங்கா கம்பனியில் இருந்து கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 2,735,912 ஐ உள்ளடக்கிய மொத்த வட்டி வருமானம் ரூபா 14,784,355 தொகை கணக்கீடு செய்யப்பட்டமை சரியானதாகும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 தொகையில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட தேயிலை | இந்த உலர்த்தும் இயந்திரத்தின் கிரயத்தை கண்டறிந்து கொள்வதற்கு போதியளவான ஆவணங்கள் | அகற்றப்பட்ட தேயிலை உலர்த்தும் இயந்திரத்தின் கிரயம் மற்றும் திரண்ட |

| | | | |
|---|---|---|---|
| | உலர்த்தும் இயந்திரத்தின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு என்பன மீளாய்வாண்டின் இறுதி வரை கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | காணப்படாமையினால் அது அகற்றப்படாதிருந்ததுடன் சொத்துக்களின் மீள்மதிப்பீடு இந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டு பூர்த்திசெய்யப்பட்டமையினால் இந்த பெறுமதி அதன் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. | பெறுமானத் தேய்வு என்பன கணக்குகளில் இருந்து அகற்றப்பட வேண்டும். |
| (இ) | கம்பனிக்கு எதிராக ஊழியர் ஒருவரினால் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் கம்பனி ரூபா 2,814,705 தொகை செலுத்த வேண்டியிருந்தமை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதற்காக கம்பனி மேன்முறையீடொன்றை சமர்ப்பித்து தீர்ப்பின் பிரகாரம் செலுத்த வேண்டிய தொகை கொட்டபொல தொழில் நீதிமன்றத்தின் வைப்பு செய்யப்பட்டு பெறவேண்டிய வைப்பாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட போதிலும், அதன் காரணமாக ஏற்படக் கூடிய பொறுப்புக்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் கம்பனிக்கு ஏற்படக்கூடிய பொறுப்புக்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் மாற்றமடையாது காணப்பட்ட ரூபா 6,059,340 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய மீதிகளுக்குரியதாக அறவிட முடியாக் கடனுக்கான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது அறவிட முடியாக் கடன் ஏற்பாடு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாற்றமடையாமல் காணப்படுகின்ற வியாபார மற்றும் ஏனைய மீதிகளுக்காக அறவிட முடியாக் கடன் ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். |
| (உ) | கிறாகம தோட்டத்தின் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகையொன்று காணப்படாதிருந்தமை முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் | மெணிக்திவெல தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட கொழுந்துகளுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்ட முற்பண தொகையாகும். இதனை எதிர்வரும் | கிறாகம தோட்டத்தின் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் கிடைக்க வேண்டிய மீதியை ஒப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் காண்பிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அந்த கம்பனியில் இருந்து ரூபா 1,046,771 தொகை பெற வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வருடத்தின் போது உரிய அங்கீகாரத்துடன் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் மீதியின் கீழ் காண்பிக்கப்பட்ட ரூபா 562,644 தொகையான தொங்கல் கணக்கு மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது கணக்குகளில் இருந்து இந்த மீதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொங்கல் கணக்கு மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 ஆம் ஆண்டின் போது BCC லங்கா கம்பனிக்கு ரூபா 10,000,000 கடன் தொகையொன்று 22 சதவீத வட்டி விகிதத்தின் அடிப்படையில் 12 தவணைகளில் அறவீடு செய்யும் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதும், ஒரு தவணையேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதனால் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி ரூபா 55,646,517 ஆகும். | 2003 ஆம் ஆண்டின் போது பீ சீ சீ லங்கா கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள கடன் பணம் மற்றும் அதற்குரிய வட்டியான ரூபா 55,646,517 தொகையை விரைவாக செலுத்துமாறு பொது முயற்சிகள் திணைக்களத்தில் இருந்து பீ சீ சீ லங்கா கம்பனிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பீ சீ சீ லங்கா கம்பனிக்கு சொந்தான 06 ஏக்கர் காணி அளவு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சிற்கு கைப்பற்றப்பட்டிருந்தமையினால் அதன் பெறுமதி பீ சீ சீ லங்கா கம்பனிக்கு கிடைத்தவுடன் எங்கள் நிறுவனத்திற்கு அந்த பணத்தை தீர்த்து வைப்பதற்கு எழுத்து மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. | கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டி என்பவற்றை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டு முதல் தனியார் தேயிலை நிறுவனத்தில் இருந்து | இந்த பணத்தை அறவிடுவதற்காக அந்த கம்பனிக்கு எழுத்து மூல | உரிய பணத்தை அறிவிடுவதற்கு முறையான |

| | | |
|---|---|---|
| கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 798,461 தொகை காணப்பட்டதுடன், அதனை அறவிடுவதற்கோ அல்லது முறையான அங்கீகாரம் பெற்று புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது. | கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்ட போதும், அனுப்பப்பட்ட கடிதம் மீண்டும் திரும்ப எங்களுக்கு கிடைத்திருந்தது. எதிர்காலத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரத்தை பெற்று புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலைக்கு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 23,414,257 தொகையில் கொள்வனவுசெய்த நீர் சூடாக்கும் இயந்திரத்திற்காக வழங்கல் நிபந்தனையின் பிரகாரம் வழங்க வேண்டிய 02 ரேடியேட்டர் இயந்திரங்கள் வழங்கப்படாமையின் காரணமாக ரூபா 1,566,002 தொகையை செலுத்தாமல் இருப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதிலும், அந்த மீதியை செலுத்த வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய தரப்பினருடன் உடன்பாட்டிற்கு வந்து பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.14 ஆம் பந்தி | மனித வள முகாமைத்துவத்திற்காக சட்ட விதிகளை வழங்குவதற்குரிய பணி நடைமுறை கைநூல் தயாரிக்கப்பட்டு திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் அதன் பிரகாரம் | மனித வள முகாமைத்துவத்திற்கான சட்ட விதிகளை வழங்குவதற்குரிய பணி நடைமுறை கைநூல் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பணி நடைமுறை கைநூலை விரைவாக தயாரித்து உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய பீஈடீ 03/2018 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | 2017 ஆம் நிதி ஆண்டின் போது நட்ட நிலை அறிக்கையிடப்பட்டுள்ள மற்றும் அது நட்டமாக இருந்தது என 2018 இன் நிதி ஆண்டின் போது குறைத்துக் கொள்வதற்கு தவறியிருந்த கம்பனியில் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்காக ஒரு ஊழியருக்கு ரூபா 3,000 வீதம் செலுத்த வேண்டிய மிகை ஊதியப் படி ரூபா 501,000 ஆக இருந்த போதிலும், அந்த எல்லையினை விஞ்சி ரூபா 1,665,978 தொகை மிகை ஊதியப் படியாக மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மிகை ஊதிய படி செலுத்த வேண்டிய போதிலும், ஊழியர்களை ஊக்குவிப்பதை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையினால் மிகை ஊதியப் படியாக ரூபா 2,166,978 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மிகை ஊதிய படி செலுத்தும் போது உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கியிருக்க வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் நிதித் தேவையினை பூர்த்தி செய்து கொள்வதற்காக 2015/16 ஆம் ஆண்டின் போது நிலையான வைப்பை பிணையாக வைத்து மேலதிக பற்று வசதிகள் பெறப்பட்டிருந்ததுடன், அந்த ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 63,067,584 தொகையான மேலதிக பற்று மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 87,055,800 வரை அதிகரித்திருந்தது. அதனால் 2019/20 ஆண்டின் போது மேலதிக பற்று வட்டி ரூபா 13,509,808 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், தேறிய நிதி வருமானம் மறை மீதியொன்று ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. கம்பனியின் நிதி நிலைமையை சிறப்பான முறையில் | 2015 ஆம் ஆண்டில் தேயிலை சக்தி நிறுவனத்திற்கு ரூபா 50 மில்லியன் வழங்கியமை மற்றும் மெணிக்திவல தேயிலை தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக ரூபா 41 மில்லியன் தொகையும், இயந்திர பொறிமுறைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 28 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தமையினால் வங்கி மேலதிகப் பற்றிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. மேலும், சாத்திய வள ஆய்வு இன்றி கையளிக்கப்பட்ட மெணித்திவள மற்றும் கினிதும ஹில்ஸ் தொழிற்சாலைகளில் ஒன்று சேர்ந்த நட்டமும் வங்கி மேலதிகப் பற்று | நிதி நிலைமையை சிறந்த முறையில் பேணிச் செல்வதற்காக முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| செல்வதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. | அதிகரித்தமைக்கு காரணமாக இருந்தது. நிதி நிலைமையை சிறந்த முறையில் பேணிச் செல்வதற்காக குறைந்த வட்டி விகிதத்தின் கீழ் வியாபார நிதி ரீதியான கடன் ரூபா 50 மில்லியன் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 48,196,916 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய பற்றாக்குறை ரூபா 50,211,574 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 98,408,490 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி தேயிலை இருப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 62,034,269 இனால் அதிகரித்தமையால் விற்பனை கிரயம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது. மேலும், விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் 87.14 சதவீதத்தினால் குறைவடைந்தமையும் அதற்கு தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 28 ஆம் திகதிய KTFL/1419/2019 ஆம் இலக்க பணப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் கீழ் காணப்படுகின்ற தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தியின் குறைபாடுகளை இனங்காண்பதற்கும் தற்போது இலாபம் பெறாத தேயிலை தொழிற்சாலைகளை இலாபகரமான நிலைக்கு கொண்டு வருவதற்கும் செயற்பாட்டு மதியுரையாளர் ஒருவர் ஒரு வருடத்திற்காக சேர்க்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும் தொழில் மாதிரியில் குறிப்பிடப்பட்ட தேயிலை கொழுந்துகளை பெற்றுக்கொள்ளல், உற்பத்தி நடைமுறைகள், தேயிலை ஏலமிடல் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு தேயிலை சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் மதியுரையாளரின் சேவை கம்பனியால் பெறப்பட்டிருந்ததுடன், அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக புதிய கோரிக்கை அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முன் மதியுரையாளர் கேட்டு விலகிச் சென்றமையால் 2019 நவம்பர் மாதம் முதல் அவரின் சேவை பெறப்பட்டிருக்கவில்லை. | விஷேட பணிகளுக்காக சேர்க்கப்படுகின்ற உத்தியோகத்தர்களின் தொழில் மாதிரியில் குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போன்ற பணிகளின் செயல்முன்னேற்றம் ஒன்று காண்பிக்கப்படாதிருந்ததுடன், 08 மாதங்களின் பின்னர் உரிய மதியுரையாளர் சேவையில் இருந்து நீங்கிச் செல்லும் சந்தர்ப்பம் வரையிலும் அவருக்காக ரூபா 1,602,040 தொகை செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கம்பனி 2015 ஆம் ஆண்டின் போது தேயிலை சக்தி நிதியத்திற்கு வருடாந்தம் 11 சதவீத வட்டி வீதத்தின் அடிப்படையில் ரூபா 50 மில்லியன் கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 59,532,264 தொகை செலவில் தேயிலை சக்தி நிதியத்திற்குரிய மெணிக்திவெல காணியில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 2019 மார்ச் 19 ஆம் திகதிய 19/0743/117/024 ஆம் இலக்க அமைச்சரவை தீர்ப்பின் பிரகாரம் கடன் பணம், உரிய வட்டி மற்றும் கம்பனி செலவிடப்பட்ட அபிவிருத்தி செலவினங்களுக்காக ஹினிதும மற்றும் மெணிக்திவெல தேயிலை தொழிற்சாலைகளின் உரித்தை சட்ட ரீதியாக கம்பனிக்கு கையேற்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரித்து கையேற்கப்படாதிருந்ததுடன், வருடாந்தம் ரூபா 5,500,000 வீதம் கிடைக்கவேண்டிய வட்டியும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கினிதும மற்றும் மெணிக்கிவெல தேயிலை தொழிற்சாலைகளை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேயிலை தொழிற்சாலைகளின் உரித்தை கம்பனிகளுக்கு கையேற்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேயிலை சபையின் நியதிகளின் பிரகாரம் ஈடுபடுத்தப்பட்ட பச்சை தேயிலை கொழுந்து 100 கிலோகிராமில் இருந்து ஆகக் குறைந்தது பூர்த்தி தேயிலை 21.5 கிலோகிராம் உற்பத்தி மட்டத்தில் பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கம்பனிக்குரிய 04 தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்தி அந்த மட்டத்தை அடையாதிருந்தமையின் காரணமாக பச்சை தேயிலை கொழுந்தின் அடிப்படையில் ரூபா 24,101,145 தொகை சிக்கனமற்றமாக செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது தரமான ஆகக் கூடிய பச்சை தேயிலைக் கொழுந்துகளை பெற்றுக் கொள்ளுவதற்காக நவீன கொழுந்து எண்ணக்கருவின் கீழ் ரூபா 1,566,580 தொகை செலவிடப்பட்ட போதிலும் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | பின்வரும் விடயங்களினால் தற்போது வரையிலும் தேயிலை தொழிற்சாலைகளில் கொழுந்து சதவீதம் பாரியளவில் வீழ்ச்சியடைந்திருந்தது. தொழிலாளர் பற்றாக்குறையினால் 07 நாட்களுக்கு ஒரு தடவை கொழுந்து பறிப்பதற்கு சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் ஈடுபடுத்தப்படாமை, தொழிலாளர் கிரயம் மிகவும் கூடிய பெறுமதியை கொண்டிருந்தமையினால் தேயிலை துறையின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை மற்றும் தேயிலை துறையில் காணப்பட்ட பயிர்செய்கைகளில் அனேகமானவை 30 வருடங்களை விஞ்சியிருந்தமையினாலும் கொழுந்தின் தரம் கீழ் மட்டத்தில் காணப்பட்டமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. கொழுந்தின் தரம் வீழ்ச்சியடைந்தமையினால் கழிவு தேயிலையின் சதவீதம் உயர்வடைந்து சென்றமையே தொழிற்சாலையில் காணப்பட்ட முன்னேற்றம் ஆகும். இதனால் நேரடியாக 21.5 வீதத்தை பேணிச்செல்வது முடியாத காரியமாக இருந்தது. | தேயிலை சபையின் நியதிகளின் பிரகாரம் உற்பத்தி மட்டத்தை பேணிச் செல்வதற்கும், பூர்த்தி தேயிலை குறைவடைவதற்கு தாக்கமளித்த ஏனைய காரணங்கள் காணப்படுகின்றதா என்பது தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்குரிய தேயிலை தொழிற்சாலைகள் மீளாய்வாண்டின் போது உற்பத்தி இயளலவினை விட கீழ் மட்டத்தில் | 2020 சனவரி முதல் 2020 மார்ச் வரை தொழிற்சாலைகள் அமைந்துள்ள பிரதேசத்தில் மிகவும் உலர் காலநிலை | தொழிற்சாலைகளில் காணப்பட்ட உற்பத்தி இயலளவை பயன்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் ஹினிதும மற்றும் மெணிக்திவெல தொழிற்சாலைகளில் முறையே 71 சதவீதம் மற்றும் 72 சதவீதம் என குறைவான பயன்பாட்டு மட்டத்தில் காணப்பட்டது. ஹினிதும மற்றும் தேறங்கல தேயிலை தொழிற்சாலைகளுக்காக தேயிலை கொழுந்து வழங்கலை அதிகரிக்கும் நோக்கில் மீளாய்வாண்டின் போது கொழுந்து வழங்குனர்களுக்கு பச்சைக் கொழுந்திற்கான ஊக்குவிப்பாக முறையே ரூபா 1,531,453 தொகை மற்றும் ரூபா 1,543,417 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | காணப்பட்டதுடன் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் காணிகளில் தேயிலைச் செடிகள் காய்ந்தமையின் காரணமாக அவர்களால் தேயிலை கொழுந்து பறித்தல் நிறுத்தப்பட்டிருந்தது. மற்றும் பிரதேசத்தில் போட்டித் தனியார் தேயிலை தொழிற்சாலைகள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளதுடன் பல்வேறு முறைகளின் மூலம் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு ரூபா 5 முதல் ரூபா 15 வரை ஊக்குவிப்பு படி வழங்கி அந்த தொழிற்சாலைகளுக்கு கொழுந்துகளை பெற்றுக் கொள்ளுதல் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறான நிலைமையில் தொழிற்சாலைகளுக்கு கவனத்தில் கொள்ளக் கூடிய கொழுந்து அளவினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு இந்த ஊக்குவிப்பு படி காரணமாக இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கம்பனிக்குரிய ஹினிதும மற்றும் தேறங்கல தேயிலை தொழிற்சாலைகள், கொழுந்து வழங்குவதற்கு முன்னர் கொழுந்து வழங்குனர்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 891,681 மற்றும் ரூபா 220,464 தொகைகள் முற்பணமாக செலுத்தப்பட்ட போதிலும் வழங்குனர்களினால் கொழுந்து வழங்கப்படாமையின் காரணமாக அந்த மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | சட்டத்தரணி ஊடாக உரிய நபர்களுக்கு அறவிடல் கட்டளை அனுப்பப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அதை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணமாக கொழுந்து வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | உள்நாட்டு விற்பனை வருமானத்தை மேம்படுத்ததும் நோக்குடன் 2019 ஏப்ரல் மாதத்தில் "நுவரெலிய வசந்த பூங்கா" களியாட்ட நிகழ்ச்சி | தேயிலை பக்கற்றுக்களின் விலை 2019 ஆகஸ்ட் மாதம் திருத்தப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் விலை உயர்வடைந்ததுடன் விற்பனை | மேம்படுத்தல் செலவீனங்களை செய்யும் ஆக்கபூர்வமான மேம்படுத்தல் |

மற்றும் ஏனைய வியாபார கண்காட்சிகளுக்காக ரூபா 966,860 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் ரூபா 10,577,492 இனால் குறைவடைந்திருந்தது. இவ்வாறான செலவினங்களை செய்தல் விற்பனை நிலையத்தின் உள்நாட்டு தேயிலை விற்பனை வருமானம் அதிகரிப்பதற்கு காரணமாக இருக்கவில்லை.

வருமானம் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் 2020 யூலை மாதம் மீண்டும் விலையினை திருத்தி விலை குறைக்கப்பட்டுள்ளது.

உபாய வழிகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.